# சித்தாண்டி விநாயகபுரம் நாககன்னி அம்மன் காவியம்



ஆக்கம்

கவிஞர் சோதிடர் வி. சிகண்டிதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாண்டி விநாயகபுரம்
# நாககன்னி அம்மன் காவியம்

ஆக்கம்
கவிஞர் சோதிடர்
வி. சிகண்டிதாசன்

வெளியீடு
ஓம்சக்தி சோதிட ஆராய்ச்சி நிலையம்
168/1, நீதிமன்ற வீதி,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி துணை

# என்னுரை

நான் பிறந்து வளர்ந்த ஊரான சித்தாண்டி திருப்பதிக்கு வடகிழக்கு பக்கமாக அமையப் பெற்றுள்ள நாக கன்னி ஆலயத்திற்கு கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் சென்றிருந்த போது அன்னையின் திருவருளைக் கண்டு வியப்புற்றேன் பட்டு மணல் வீதியிலே பார்ப்போர்கள் வியக்கும் வண்ணம் பாரிய கரும் புற்றுக்குள் குடியிருந்து அருளாட்சி புரிந்து வரும் நாககன்னியின் திருவருள்ப் பெருமைகள் பல வருடங்களாக பேசப்பட்டுக் கொண்டிருந்த போதும் அதை நேரில் காணும் பாக்கியம் அடியேனுக்கும் கிடைத்ததால் இக்காவியம் பாடுவதற்கு அனுக்கிரகம் கிடைத்தது.

வேண்டுவோருக்கு வேண்டும் வரங்களை வழங்கும் ஸ்ரீ நாககன்னி அம்மனிடம் என்னை நீண்ட நாளாக வாட்டி வதைத்த நோயைக் குணமாக்கி தரும் படி கோரிக்கை வைத்தேன் அதன் படி எனது வேண்டுதலை ஏற்று பூரணமான சுகத்தினை வழங்கிய அன்னையின் அருமை பெருமைகளை உணர்ந்து அவள் அருளைக் கொண்டு பாடிய இப்பாடல்களை அவளது பொற்பாத கமலங்களில் சமர்ப்பணம் செய்கின்றேன். இப் பாடல்களை வாங்கி படிப்போர்க்கும், பாடுவோருக்கும், கேட்போருக்கும் நாககன்னி அன்னையின் திருவருள் எப்போதும் கிடைக்கும் என்பதில் எவ்வித ஐயப் பாடும் இல்லை இந்நூலுக்காக நீங்கள் வழங்கும் நிதி யாவும் நாககன்னி அன்னையின் ஆலய வளர்ச்சிக்கு பயன்படுமென்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

இந்நூலுக்காக தன்னால் முடிந்த உதவியை வழங்கிய திரு. பத்மநாதன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் நாககன்னி அன்னையின் திருவருள் எப்போதும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன். இவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை உவர்மலையை வதிவிடமாகவும் பன்குளத்தை தொழில்த்தலமாகவும் கொண்டு பணிபுரியும் அடியவராவார் அன்னாருக்கு மீண்டும் ஒரு முறை எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்நூலை வெளியிடுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய ஆலய பரிபாலன சபையினருக்கும் ஏனைய நண்பர்கள் அன்பர்கள் அனைவருக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வண்ணம்
என்றும் இறைபணியில்
கவிஞர் சோதிடர் வி.சிகண்டிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் வணக்கம்



உன்னருள் நாடியே பாடிட வந்தேன்
　　உமைமகனே கணநாதா அருள்தந்து காப்பாய்
என்மீது உன்னுடைய பார்வை படவேண்டும்
　　ஏகாந்த ஐங்கரா ஆனைமுக முதல்வா
இன்னருள் பொழியும்திரு நாககன்னி அன்னை
　　இனியநற் காவியம் அடியேனும் பாட
தன்னருள் புரிந்தென்னை ஆட்கொள்ள வேண்டும்
　　தாய்தந்தை உலகமென வந்த பெருமானே

பன்னிருகை வேலவனின் சோதரனும் நீயே
　　பாரதம் எழுதிய மூலவனும் நீயே
உன்தயவு இல்லாமல் ஒருசெயலுமில்லை
　　உனைத்தினம் பணிவோர்க்கு ஒருதுயருமில்லை
கன்னல் விளை சித்தாண்டி விநாயகபுரத்தில்
　　கன்னியாய் விளங்கிடும் நாககன்னி அன்னை
இன்பமிகு காவியம் இயற்றியே பாட
　　ஏற்றம் மிகு வரம்வந்து கணபதியே காப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்தாண்டி விநாயகபுரம்
# நாககன்னி அம்மன் காவியம்

அழகான வேப்பைமரம் கரும்புற்று தன்னில்
அருள்தரும் நாகமென அமர்ந்திட்ட தாயே
வழமை நெறி தவறாமல் வணங்கி வருவோர்க்கு
வளமான வாழ்வு நலம் தந்தருள்வாயே
நிழலாக இருந்துபல உயிர்களைக் காத்து
நிம்மதி நல்வாழ்வு வழங்கி அருள்வாயே
பழம்பெரும் சித்தாண்டி விநாயக புரத்தில்
பரிவோடு அருள் செய்யும் நாககன்னித் தாயே 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிசிவன் அணிகலம் ஆனவளும் நீயே
ஐந்து தலை ராசனை கவர்ந்த பத்தினியே
சோதியென அடியார்க்கு காட்சியருள் தந்து
தோஷவினை நீங்கிட வழிசெய்வாயம்மா
ஓதியே உன்திரு நாமத்தை நாளும்
ஒழுங்காக பணிசெய்வோர் துயர்பிணி களைவாய்
சேதிமிகு சித்தாண்டி விநாயக புரத்தில்
சீரருள் புரிகின்ற நாககன்னித் தாயே 02

இட்டமுடன் நீயிங்கு இருப்பதை உணர்த்தி
இனியநற் பொங்கலிட அடியார்க்குச் சொன்னாய்
கட்டழகு கன்னியென கண்முன்னே தோன்றி
கணப்பொழுதில் காட்சியருள் தந்து நீமறைந்தாய்
பட்டுமணல் பரந்த வெளி வேப்பை நிழல் சூழ
பார்ப்போர்கள் வியந்திடும் புற்றுக்குள் அமர்ந்தாய்
கொட்டும் எழில் சித்தாண்டி விநாயக புரத்தில்
குடிகொண்டு அமர்ந்திட்ட நாககன்னித் தாயே 03

ஈரமுள்ள இதயத்தால் உனைப் போற்றிப் பணிந்து
இனிமையுற பால்பழம் பாலமுது தருவார்
பாரங்கள் நீங்கிட நீயருள் தருவாய்
பாவவினை துயரங்கள் அகன்றோடச் செய்வாய்
இராகுவுடன் கேதுவால் வருகின்ற தோஷம்
உன்பார்வை பட்டாலே பறந்தோடும் தாயே
சாரமுள்ள சித்தாண்டி விநாயக புரத்தில்
சக்தியாய் அருள் தரும் நாககன்னித் தாயே 04

உள்ளத்தில் உண்மையாய் உனைவேண்டிப் பணிவார்
உயர்வான வாழ்வினில் அவர் நலம் பெறுவார்
வெள்ளையுடை விரிசடை கொள்ளை அழகோடு
விளங்கிடும் தாளம்பூ வாசனையில் மகிழ்வாய்
அள்ளிடக் குறையாத அருள் மழை அமுதே
ஆனந்தக் கூத்திலே நடனமிடும் ரதியே
தெள்ளிய சித்தாண்டி விநாயக புரத்தில்
தெய்வமாய் அருள்தரும் நாககன்னித் தாயே 05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்ந்துநீ ஊரெல்லாம் அளந்து நீ வருவாய்
உனக்கான தேவைகளை கேட்டு நீ பெறுவாய்
சேர்ந்திடும் அடியார்கள் வெள்ளி செவ்வாயில்
தித்திக்கும் பொங்கலுடன் பூசைகளும் செய்வார்
நேர்த்தியாய் உனக்கு பல ஆடையணி சேரும்
நினைப்போர்கள் வாழ்விலே துயர்பிணிகள் தீரும்
சாந்தநல் சித்தாண்டி விநாயக புரத்தில்
சக்தியாய் விளங்கிடும் நாககன்னித் தாயே 06

எத்திசைகள் எங்குமே உன்ன ருளாட்சி
எண்ணுவோர் நாவெல்லாம் உன்திருப் பேச்சு
இத்தரையில் நீசெய்யும் அற்புதங்கள் கோடி
உன்திரு அருள்நாடி வருவார்கள் ஓடி
உத்தமிப் பெண்களின் உயிராகத் திகழ்வாய்
உருமாறி அருள்மாறி காட்சியருள் தருவாய்
சித்துநிறை சித்தாண்டி விநாயக புரத்தில்
சக்தியாய் அருள்தரும் நாககன்னித் தாயே 07

ஏறிய விஷத்தையும் இறங்கிடச் செய்வாய்
என்றும்உனை பணிவோரை தீங்கின்றிக் காப்பாய்
சீறியே நீயிங்கு சினங்கொண்டு எழுந்தால்
தேசங்கள் யாவுமே தீயாக எரியும்
மீறியே வருகின்ற படைகளும் நடுங்கும்
மயங்கிடும் உயிரெல்லாம் உனைக்கண்டு மகிழும்
தேறிய சித்தாண்டி விநாயக புரத்தில்
தெய்வமாய் அருள் தரும் நாககன்னித் தாயே 08

ஐந்தான பூதங்களை அடக்கியே ஆள
ஐந்து தலை நாகமாய் அவதரித்தவளே
இந்திரன் சந்திரன் சேனைகளும் பணிய
ஈசனின் திருமார்பில் இடம் பிடித்தவளே
செந்தாமரைப் பொய்கை தாழைவனம் அருகில்
செழிப்போடு குடிகொண்டு அமர்ந்திட்ட தாயே
கந்தனது சித்தாண்டி விநாயக புரத்தில்
கனிந்தருள் செய்கின்ற நாககன்னித் தாயே 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமனதாய் உனைத் தேடி வருகின்ற அடியார்
உள்ளத்தின் உணர்வுகளை நீயிங்கு அறிவாய்
பெருகிவரும் பேய்பில்லி சூனியங்கள் யாவும்
பணிந்துனை தொழுதிட பறந்தோடிப் போகும்
கருணைவிழி கொண்டு நீ காத்திட வருவாய்
கரும் புற்றிலிருந்தபடி காட்சியும் தருவாய்
அருள்மிகு சித்தாண்டி விநாயக புரத்தில்
அருள்தந்து காக்கின்ற நாககன்னித் தாயே 10

ஓங்காரம் ஆங்காரம் அனைத்துமாய் நின்று
உமையவளின் ஒருவடிவமாகவும் வந்து
பாங்காக படம் கொண்ட நாகமென திகழ்ந்து
பணிகின்ற அடியார்கள் குறைதீர்க்கும் தாயே
நீங்காத நோய்பிணி துயரங்கள் யாவும்
நீலவிழிப் பார்வையால் பனிபோல மாறும்
தாங்கிடும் சித்தாண்டி விநாயக புரத்தில்
தந்தருள் புரிகின்ற நாககன்னித் தாயே 11

ஔடதம் உன்னிடம் இருக்கின்ற போதும்
அலைந்து நான் திரிவதில் என்னம்மா லாபம்
கௌரவம் மிகுந்த உன் கருணைக்கு ஈடாய்
காசினியினில் உயர்வாக ஏதம்மா உண்டு?
ஔவியம் கொள்ளாது அன்போடு உன்னை
அண்டினார் வாழ்விலே ஏதம்மா துன்பம்
பௌவிய சித்தாண்டி விநாயகபுரத்தில்
பதிகொண்டு அருள்தரும் நாககன்னித் தாயே 12

கண்கண்ட தெய்வமென கலியுகம் தன்னில்
காட்சிதரும் கரும்நாகம் ஆனவளும் நீயே
மண்கொண்ட புற்றுக்குள் மறைவாக இருந்து
மானிடரைக் காக்கின்ற மாதாவும் நீயே
பண்கொண்டு உனைப்பாடும் பாவியெனைக் காத்து
பரிவோடு நல்லவரம் தந்தருள்வாயம்மா
எண்ணரிய சித்தாண்டி விநாயக புரத்தில்
எழுந்தருள் புரிகின்ற நாககன்னித் தாயே 13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுமலை வனமெல்லாம் உந்தனது ஆட்சி
கருதியுனை தொழுவோர்க்கு கொடுத்திடுவாய் காட்சி
மாடுவயல் செல்வத்தால் வாழ்வோர்கள் உந்தன்
மகிமைகளைத் தானுணர்ந்து போற்றிடு வாரம்மா
பாடுபடும் மாந்தர்க்கு பாதுகாப்பாக
பக்கதுணை இருந்து நீ காத்திடுவாயம்மா
ஏடுபுகழ் சித்தாண்டி விநாயக புரத்தில்
எழுந்தருள் புரிகின்ற நாககன்னித் தாயே 14

கிரிடம் நகை அழகோடு அசைந்துநீ வந்தால்
கிளர்ந்தெழும் பூதங்களும் அடங்கிடும் தன்னால்
கருடனும் உனைக் கண்டு கதிகலங்கிடுவான்
கண்விழி அசைவினில் காலனும் மறைவான்
பெருமைகள் பலபெற்ற பேரின்பத்தாயே
பிள்ளைகள் செய்தபிழை பொறுத்தருள்வாயே
அருள்மிகு சித்தாண்டி விநாயக புரத்தில்
அருள்தந்து காக்கின்ற நாககன்னித் தாயே 15

கீழான அரவங்கள் அத்தனையு முந்தன்
கீர்த்திமிகு கருணைக்கு பயந்து பணி செய்யும்
மேலான மாதவன் ஈசனோடு குமரன்
மதித்திடும் மங்கையென வந்த மாதாவே
தாழாத பக்தியுடன் தினம் வேண்டித் தொழுவோர்
தாரமொடு நல்வாழ்வை பெற்றிங்கு திகழ்வார்
வேலான சித்தாண்டி விநாயக புரத்தில்
வீற்றிருந்தருள் செய்யும் நாககன்னித் தாயே 16

குழந்தையில்லாக் குறையோடு உனைவேண்டி வருவார்
குறையின்றிப் பணிசெய்தால் குழந்தைவரம் அருள்வாய்
கிழமைகளில் செவ்வாயுடன் வெள்ளி வரும் நாளில்
கிட்டிடும் உனக்குரிய ராகு காலத்தில்
வழங்கியே பால் பழம் பக்தியுடன் பணிந்து
விளக்கேற்றும் மங்கையர்கள் வேண்டுவதைத் தருவாய்
பழமைசேர் சித்தாண்டி விநாயக புரத்தில்
பரிவோடு அருள்கின்ற நாககன்னித் தாயே 17


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாத துஷ்ரரை குலைந்தோடச் செய்வாய்
கூப்பிட்டு அழைப்போர் முன் ஓடியே வருவாய்
தேடாத மாந்தர்க்கு தெரியாமலிருப்பாய்
தேடியே பணிவோர்க்கு தரிசனம் தருவாய்
கேடான செயல்கண்டு கிளர்ந்து நீ எழுவாய்
கேட்போர்க்கு எப்போதும் கேட்டவரம் தருவாய்
நீடான சித்தாண்டி விநாயக புரத்தில்
நிலைத்தருள் செய்கின்ற நாககன்னித் தாயே 18

கெதியென்று வருவோர்க்கு கதிசெய்யும் தாயே
கேடு வினையில்லாத வாழ்வருள்வாய் நீயே
விதிமாற்றும் வித்தகி வேதாந்தி நீயே
விண்ணோரும் மண்ணோரும் போற்றிடும் தாயே
மதியழகு மின்னலிடை வண்ண விழித்தாயே
மயங்கும் பல வடிவாகத் திகழ்பவளும் நீயே
பதியிலுயர் சித்தாண்டி விநாயக புரத்தில்
பரிவோடு அருள் தரும் நாககன்னித் தாயே 19

கேதுக்கும் ராகுக்கும் அதிபதி நீயே
கேதாரன் உடல் பாதி பெற்றவளும் நீயே
மாதுமை மனோகரி மறுவடிவம் நீயே
மங்கையர் குலம் காக்கும் நாகரூபிணீயே
ஓதுவார் உள்ளத்தில் ஒளியாகத் தோன்றி
ஓங்கார வடிவமாய் சிரிப்பவளும் நீயே
தீதில்லாச் சித்தாண்டி விநாயக புரத்தில்
திருவருள் புரிகின்ற நாககன்னித் தாயே 20

கைகால் உறுதிபெற கருணை மழை பொழிவாய்
கணமேனும் மறவார்கள் கவலைதுயர் களைவாய்
நெய்விளக் கேற்றிவர நிம்மதியைத் தருவாய்
நிலையான செல்வமுடன் நலமெல்லாம் தருவாய்
செய்தொழில் கருமங்கள் சிறக்க அருள் புரிவாய்
செந்தாழம் பூவிலே மகிழ்ந்து துயில் கொள்வாய்
மெய்யான சித்தாண்டி விநாயக புரத்தில்
மேலான அருள் தரும் நாககன்னித் தாயே 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய செயல் தீவினையை வேரோடறுப்பாய்
குறையோடு வருவோர்கள் குறைதீர்த்து வைப்பாய்
மடியேந்தும் மங்கையர்கள் மானத்தைக் காப்பாய்
மாங்கல்ய தோஷத்தை போக்கியருள் செய்வாய்
வடிவுடைய கன்னியென வணங்கிடவே வந்து
வாழ்வோடு வளமெல்லாம் தந்தருள்வாயம்மா
குடிகள்நிறை சித்தாண்டி விநாயக புரத்தில்
குடிகொண்டு அருள்செய்யும் நாககன்னித் தாயே 22

கோவில் குளம் உனக்காகப் பலஇருந்தாலும்
குடிகொள்ள கரும்புற்றைத் தேர்வு செய்தாயே
தாவிடும் செய்வினை ஊழ்வினைகள் அகல
தன்னருள் தந்தெம்மை காத்தருள் செய்வாய்
காவியம் பாடியுன் கழலடி பணிந்தேன்
கருணை கொண்டடியவரைக் காத்தருள வேண்டும்
மேவிடும் சித்தாண்டி விநாயக புரத்தில்
மேலான அருள்தரும் நாககன்னித் தாயே 23

## வாழி

தித்திக்கும் செந்தமிழ் சைவநெறி வாழி
திருவருள் புரிகின்ற தெய்வங்கள் வாழி
சக்தியாய் விளங்கி நல்லருள் காக்கும்
சீர்மிகு நாககன்னி அன்னையருள் வாழி
பக்திமிகு புராணங்கள் பதிகங்கள் வாழி
பாடுவோர் பணிவோர்கள் பணிதொண்டு வாழி
எத்திக்கும் வாழ்கின்ற அடியார்கள் வாழி
எழில் பொங்கும் மட்டுநகர் சித்தாண்டி வாழி 24

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாககன்னித் தாயே போற்றி!

ஆதி சக்தியின் வடிவமே போற்றி
அரவமாய்த் திகழும் அன்னையே போற்றி
பாதி சக்தியை சிவனிடம் பெற்று
பக்தரைக் காக்கும் தேவியே போற்றி
சாதிக்கும் சக்தி தருவாய் போற்றி
சங்கு சக்கரத் தாயே போற்றி
நாதி அற்றோர்க்கு நல்லருள் புரியும்
நாககன்னித் தாயே போற்றி

அண்டங்கள் யாவும் அளப்பாய் போற்றி
ஆயிரம் வடிவங்கள் எடுப்பாய் போற்றி
கண்கண்ட தெய்வமானாய் போற்றி
கலியுகம் தன்னைக் காப்பாய் போற்றி
மண்கொண்ட புற்றில் வாழ்வாய் போற்றி
மாந்தர்கள் துயரைத் தீர்ப்பாய் போற்றி
பண்கொண்டு பாட அருள்வாய் போற்றி
பரிவுள்ள நாககன்னியே போற்றி

சோதியாய் விளங்கும் சுந்தரி போற்றி
சுகங்களை வழங்கும் அந்தரி போற்றி
நீதியைக் காக்கும் நீலியே போற்றி
நீசரை மாய்க்கும் சூலியே போற்றி
போதி மரத்துறை ரூபினி போற்றி
புற்றோடு வேம்பில் துயில்வாய் போற்றி
ஓதிடும் அடியார் உளத்துயர் தீர்க்கும்
ஓம் சக்தி நாகன்னியே போற்றி

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org